DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF, NANGUNERI

| | | |
|---|---|---|
| **Original Suit No** | : | **O.S.226/2022** |
| **Deposition of witness for** | : | **Plaintiff** |
| **Serial No. of Witness** | : | **PW.1** |
| **Name** | : | அய்யாபிள்ளை |
| **Father's Name** | : | சிவனைந்தான் |
| **Village** | : | வேப்பிலாங்குளம் பரப்பாடி |
| **Taluk** | : | நான்குநேரி |
| **Age** | : | 65 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of day of 07.08.2024

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை.

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனது முதல்விசாரணை வாக்குமூலத்தை எழுத்துமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. எனது சொந்த ஊரே வேப்பிளாங்குளம் என்றால் சரிதான். அந்த ஊரில் தான் நான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். சிறு வயது முதலே அங்கு தான் வசிக்கிறேன். என் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர்கள் என்றால் நாங்கள் 2 பேர். நானும், எனது அண்ணனும் தான். நான் எனது அண்ணண் மீது தனிப்பட்ட முறையில் வழக்கு தாக்கல் செய்துளேன் என்றால் ஆமார் நிலதிற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்தவ ழக்கில் உள்ள அதே சொத்து தான்இந்த சொத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான. அந்த வழக்கில் சொல்லயுள்ள காரண காரியங்களை இதே வழக்கிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கு எனக்கு எதிராக தீர்ப்பாகிவிட்டது என்றால்

சரிதான். அந்த தீர்ப்புற்கு எதிராக நான் எந்த மேல்முறையிடும் செய்யவில்லை என்றால் சரிதான். நான் 2 வழக்கிலும் ஒரே வழக்ககுமூலத்தை சொல்லியுள்ள நிலையில் நீதிமன்ற அனுமதி பெற்று இவ்வழக்கை தாக்கல் செய்தேனா என்றால் எனக்கு தெரியவில்லை. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.